**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | ) | |
| | | | ) | |
| Miscellaneous | .. | .. | ) | |
| | | | ) | **Sessions Case No. 126/2025** |
| Preliminary Register | .. | .. | ) | |
| | | | ) | |
| Sessions | .. | .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW2** |
| | { | |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | முரளிதரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **24th day of November 2025.**

முதல் விசாரணை : முதல் விசாரணை : நான் தற்போது விருதுநகர் பஜார் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த

14.10.2022 ம் தேதி விருதுநகர் சூலக்கரை காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது, விருதுநகர் மேற்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் கோபு அவர்களுக்கு கிடைத்த தகவலின்பேரில் நான் மற்றும் தலைமை காவலர் பழனிகுமார், 3037 ராமசந்திரன் ஆகியோர் விருதுநகர் சின்னமூப்பன்பட்டி சரக எல்லைக்குள் அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதை தடுக்கும்பொருட்டு ரோந்து செய்துவரும்போது, யூனியன் நடுநிலைப்பள்ளி அருகே ஒருவர் கையில் சிறிய மஞ்சள் பையுடன் சந்தேகத்திற்கிடமாக நின்றுகொண்டிருந்தவரை சார்பு ஆய்வாளர் விசாரிக்க பின்னர் பெயர் விலாசம் தெரிந்துகொண்ட பாண்டியன், த/பெ.மகாமணி, சின்னமூப்பன்பட்டி என்பவரை விசாரிக்க தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட கணேஷ் 701 புகையிலை 20 எண்ணம் மற்றும் கூல்லிப் 7 எண்ணம் மற்றும் மஞ்சள் பை ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் யாரும் வராததால் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார். அத்தாட்சியில் கையொப்பமிட பொதுமக்கள் யாரும் முன்வராததால், மகேந்திரகுமார், தலைமைகாவலர் பழனிகுமாரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கணேஷ் 701 புகையிலை எதிரியிடமிருந்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றியதுதான். அந்த கணேஷ் 701 புகையிலை சா.பொ.1 ஆகவும் கூல்லிப் புகையிலை சா.பொ.2 ஆகவும் மஞ்சள் பை சா.பொ.3 ஆகவும்

ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்தோம். பின்னர் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

உங்களை சார்பு ஆய்வாளர் மட்டும்தான் விசாரணை செய்தார்கள் என்றால் - சரிதான். நீங்கள் சம்பவதினத்தன்று காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பி ரோந்திற்கு சென்றீர்கள் என்றால் - காலை 8.30 மணிக்கு கிளம்பி சென்றோம். நீங்கள் எந்த வாகனத்தில் ரோந்திற்கு சென்றீர்கள் என்றால் - தனித்தனியாக இருசக்கர வாகனத்தில் ரோந்திற்கு சென்றோம். உங்கள் காவல்நிலையத்திலிருந்து சம்பவஇடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் - 5 கி.மீ தூரம் இருக்கும். காவல்நிலையத்திலிருந்து சம்பவம் இடம் செல்ல எவவ்ளவு நேரம் ஆகும் என்றால் - 15 நிமிடம் ஆகும். நீங்கள் ரோந்திற்கு சென்ற பகுதி மக்கள் நடமாட்டம் உள்ளபகுதி என்றால் - சரிதான். நீங்கள் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தீர்ப்பீர்கள் என்றால் - சுமார் அரை மணி நேரம் இருந்திருப்போம். காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வந்தீர்கள் என்றால் - சரியாக ஞாபகம் இல்லை எதிரியிடம் சோதனை செய்வதற்கு அவரிடமிருந்து சம்மதம் கடிதம் எழுதிவாங்கினீர்களா என்றால் - வாங்கவில்லை. பொதுமக்கள் யாரையும் சாட்சியாக அழைத்து அவர்கள்

சாட்சியம் அளிக்க வரவில்லை என்று கூறியுள்ளீர்கள் அந்த பொதுமக்களின் பெயர், விலாசம் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் - சரிதான். சார்பு ஆய்வாளர் சாட்சியாக இருக்குமாறு தனிநபர்களை அழைத்தும் அவர்கள் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்று அவர்கள் மீது சார்பு ஆய்வாளர் சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் - சரிதான். அவ்வாறு சாட்சியாக அழைத்தும் முன்வராததால் கிராமநிர்வாக அலுவலர் மற்றும் தலையாரியை சாட்சியாக அழைக்க அழைத்தீர்களா என்றால் - இல்லை. நீங்கள் தனிநபர் சாட்சியை அழைக்கவில்லை என்றும், அதனலால்தான் அவர்களது பெயர், விலாசம் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் - சரியல்ல. புகையிலை விற்பனை செய்யவதாக பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் - சரிதான். இந்த புகையிலையை உட்கொண்டதனால் வெளிநபருக்கு உடல்நிலை குறைவோ, உயிர்சேதமோ ஏற்பட்டது என்று புகார் கொடுக்கவில்லை என்றால் - சரிதான். அதேபோல் ரோந்திற்கு சென்றவர்கள் புகையிலையை உட்கொண்டு அவர்களுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதாக புகார் கொடுக்கவில்லை என்றால் - சரிதான். நீங்கள் இனம்தெரியாத நபரிடமிருந்து மேற்கண்ட புகையிலையை எதிரி வாங்கியதாக குறிப்பிட்டுள்ளதால் அந்த இனம்தெரியாத நபர் யார் என்று விசாரித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் - இல்லை. புகையிலை யாரிடமிருந்து வாங்கப்பட்டதோ அந்த நபரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று

நடவடிக்கை எடுத்தாரா என்றால் - இல்லை. நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும், உங்களுக்கு இரகசிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும், பொருட்கள் எதுவும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றவில்லை என்றுசொன்னால் - அது சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் - சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் - சரியல்ல. உங்களது மேல் அதிகாரியின் வேண்டுகோளின்பேரில் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. அத்தாட்சியில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, மேல்அதிகாரி கேட்டுகொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் - சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**